72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## ஊடக அறிவிப்பு

**திகதி வரை தடையாணை**

திகதி : 22 November 2024
நேரம் : 02:00 PM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல்: info 'at' ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**


மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi 'at' ihp.lk Twitter: @ravirannaneliya

# இலங்கையில் நுகர்வோர் நம்பிக்கை: 2022 ஆம் ஆண்டு முதலான காலப்பகுதியில் இருந்து ஒக்டொபர் மாதத்தில் நுகர்வோர் நம்பிக்கை அதிகபட்ச அளவிற்கு உயர்ந்துள்ளது

*ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நுகர்வோரின் நேர்மறை எண்ணம் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது*

இலங்கை சுகாதார கொள்கை நிறுவனம் (IHP) தனது இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின்(SLOTS) மூலம் கணிக்கும் நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களின் ஒக்டோபர் 2024 புதுபிப்பை இன்று வெளியிட்டது.

இதில் 2022 இல் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு(SLOTS) தொடங்கியதில் இருந்து, இந்த ஒக்டோபர் மாதத்தில் IHP இன் மூன்று நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களும் அவற்றின் அதிகபட்ச அளவை எட்டியுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. கடந்த மாதத்துடன் ஒப்பிடும்போது, தனிநபர் பொருளாதார நிலை மற்றும் தேசிய பொருளாதாரம் குறித்த பொதுமக்களின் பார்வை அளவீடான நுகர்வோர் எண்ணம் சுட்டெண்(ICS), 8 புள்ளிகளால் 40 ற்கு உயர்ந்து உள்ளது. மேலும், எதிர்காலத்தைப்பற்றிய அபிப்பிராயத்தை அளவிடும் நுகர்வோர் எதிர்பார்ப்பு சுட்டெண்(ICE), 9 புள்ளிகளால் 45 ற்கு அதிகரித்துள்ளது. தற்போதைய நிலவரம் பற்றிய எண்ணத்தை அளவிடும் தற்போதைய நிலவர சுட்டெண்(ICC) 5 புள்ளிகளால் 33 ற்கு அதிகரித்துள்ளது.




நுகர்வோர் எண்ணம் சுட்டெண்(ICS) மற்றும் நுகர்வோர் எதிர்பார்ப்பு சுட்டெண்(ICE) ஆகியனவின் அதிகரிப்புகளின் முக்கிய காரணங்கள் குறுகிய கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் தனி நபரின் நிதி நிலை மற்றும் நாட்டின் நிதி நிலைமை ஆகிய இரண்டைப்பற்றியும் மேம்பட்ட உணர்வுகளேயாகும். தற்போதைய கொள்வனவு நிலைமைகள் மீதான பொதுக் கருத்துகள் ஒப்பீட்டளவில் மாறாமல் இருந்துவருகின்றன.

இம்மதிப்பீடுகள், ஒக்டோபர் *2024*ல் நடத்தப்பட்ட *761* பேட்டிகளை உள்ளடக்கிய, ஒக். *21, 2021 – நவ. 7, 2024* வரை ஆய்வு செய்யப்பட்ட *21,234* பேட்டிகளை அடிப்படையாகக் கொண்டவை ஆவன. பதிலளித்தல் விகிதங்களை பொருத்து மாதிரியின் அளவு சுட்டெண்களுக்கு இடையே வேறுபடும். தேசிய மக்கள்தொகையுடன் பொருந்துமாறு பதில்கள் எடையிடப்பட்டன.

## மேலும் விவரங்கள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, November 2024, “Consumer confidence rises to highest level in October since 2022”. *Available at:* https://ihp.lk/research-updates/cciupdate202410

Institute for Health Policy, November 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence rises to highest level in October since 2022”, SLOTS Report #2024-18. *Available at:* https://ihp.lk/sites/default/files/research-updates/SLOTSReport202418.pdf

## முன் வெளிவந்த அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, September 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence dropped marginally in August 2024 in lead up to Presidential Election”, SLOTS Report #2024-13. *Available at:* https://ihp.lk/sites/default/files/research-updates/SLOTSReport202413.pdf

Institute for Health Policy, July 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence increased and reached an all-time high in June 2024”, SLOTS Report #2024-09. *Available at: https://ihp.lk/sites/default/files/research-updates/SLOTSReport202409.pdf*

Institute for Health Policy, June 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence marginally changed in May 2024 compared to the previous month”, SLOTS Report #2024-06. *Available at: https://ihp.lk/sites/default/files/research-updates/SLOTSReport202406.pdf*

Institute for Health Policy, April 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence surged to a new peak in March 2024”, SLOTS Report #2024-04. *Available at: https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202404.pdf*

Institute for Health Policy, March 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence improved in February 2024”, SLOTS Report #2024-03. *Available at: https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202403.pdf*

Institute for Health Policy, February 2024, “Sri Lanka Consumer Confidence: Consumer confidence continued to decline in January 2024”, SLOTS Report #2024-02. *Available at: https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202402.pdf*

Institute for Health Policy, March 2022, “SLOTS Consumer Confidence Survey: Methodology for tracking consumer sentiment in Sri Lanka”, SLOTS Report #2022-01. *Available at:* https://ihp.lk/publications/docs/SLOTSReport202201.pdf

### *IHP* பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிப்புகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

### முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தோரின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஓர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. அனைத்து நுகர்வோர் நம்பிக்கை சுட்டெண்களின் மதிப்பீடுகளும், வயது, பாலினம், மாகாணம், துறை, சமூகபொருளாதார நிலை, இனக்குழு, மற்றும் கல்வி போன்ற பண்புகள் உள்பட தேசிய சனத்தொகையை பிரதிநிதித்துவப்படுத்தமாறு எடையிடப்பட்டன.

### நிதியுதவி

IHP, இலங்கையின் சுகாதாரம், சமூக நிலைமைகள் மற்றும் மக்களின் கருத்துக்களில் ஏற்படும் மாற்றங்களை கணிப்பதற்காக SLOTS கருத்துக்கணிப்பை நடத்துகின்றது. கருத்துக்கணிப்பை உருவாக்க, ஆணையிட மற்றும் வடிவமைக்க IHP மட்டுமே பொறுப்பாகும், மேலும் அதற்கான முழுப் பொறுப்பையும் IHP ஏற்றுக்கொள்கின்றது. பேட்டிகள், IHP

ஊழியர்களால் தினமும் தொலைபேசியினுடாக நடத்தப்படுகின்றன. இது தேசிய கள ஆய்வு மூலம் ஆட்சேர்க்கப்பட்ட அல்லது எழுமாறாக தொடர்புகொள்ளப்பட்ட கையடக்கத் தொலைபேசி அழைப்புகளை உள்ளடக்கிய பதிலளிப்பவர்களுடன் நடாத்தப்படுகின்றது. SLOTS களப்பணியானது 2021 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நிதியுதவியாளர்களால் ஆதரிக்கப்படுகின்றது. இவர்கள் கேள்வி வடிவமைப்பு, தரவுப் பகுப்பாய்வு அல்லது அறிக்கையிடல் ஆகியவற்றில் எந்தப் பங்கையும் வகிப்பதில்லை. நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (Neelan Tiruchelvam Trust), ஆசியா மன்றம் (Asia Foundation), ஐரோப்பிய ஆணையகம் (European Commission), ஐக்கிய இராச்சியத்தின் உடல் நலப் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK National Institute for Health and Care Research), ஓபன் சொசையட்டி அறக்கட்டளை நிறுவனம் (Foundation Open Society Institute), யு .எஸ். எயிட் (USAID) வேலக்ஸ் ஸ்டிப்டங் அறக்கட்டளை(Velux Stiftung Foundation), அபுதாபி நியூயார்க் பல்கலைக்கழகம் (New York University Abu Dhabi) மற்றும் IHP பொது நலன் ஆராய்ச்சி நிதி ஆகியன நிதியளித்துள்ளன. மேலும் ஆய்வின் முடிவுகள், தற்போதைய மற்றும் முந்தைய நிதியுதவியாளர்களின் கருத்துக்கள் அல்லது நிலைகளை பிரதிபலிப்பதில்லை. மேலும் விரிவான தரவு மற்றும் முடிவுகளைப் பெற விரும்புவோர் IHP நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம்.